(1)

023897
-7 SEP 2020

சுருக்கம்

பணியமைப்பு - கருவூலக் கணக்குத் துறை - திரு எ.கிஷோர், இளநிலை உதவியாளர், கோயம்புத்தூர் மாவட்டக் கருவூல அலகு - கருணை அடிப்படையில் 20.09.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்தல் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

நிதி (கருவூலக் கணக்கு - 2)த் துறை

அரசாணை (3ப) எண் : 11

நாள். 01.09.2020
சார்வரி, ஆவணி - 16,
திருவள்ளுவர் ஆண்டு -2051,

படிக்கப்பட்டது:

1. கோவை மாவட்டக் கருவூல அலுவலர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.10286/2018/அ2, நாள் 20.09.2019.
2. கருவூலக் கணக்கு ஆணையரின் கடித ந.க. எண்:44175/ சி1/2019, நாள் 23.12.2017.
3. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் (மற்றும்) வேலைவாய்ப்புத் (க்யூ-1) துறை, நாள்.23.01.2020.

********

**ஆணை :**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்டக்கருவூல, அலகில், கோவை தெற்கு சார்நிலை கருவூலத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி வந்த திரு கோ.எத்திராஜ் என்பவர் 07.08.2017 அன்று பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் மற்றும் மகனுமாகிய திரு எ.கிஷோர், கருணை அடிப்படையில், கோவை மாவட்டக் கருவூலத்தில் பணியமர்த்தப்பட்டு, 20.09.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும், இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்பில் பொதுத் தேர்வில் தேர்ச்சிப் பெற்றுள்ளார் என்றும், பணியேற்பு செய்த நாளில் நிர்ணயிக்கப்பட்ட வயதினை நிறைவு செய்துள்ளார் என்றும், அவரின் குடும்பம் வறிய

..2...

Scanned with CamScanner

நிலையில் உள்ளது என்றும் தெரிவித்ததுடன், கோவை மாவட்டக் கருவூலத்தில் பணிநியமனம் பெற்ற திரு எ.கிஷோர், இளநிலை உதவியாளரின் பணியினை, அவர் பணியில் சேர்ந்த நாளான 20.09.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

2. பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட செயல் முறை ஆணையில் திரு எ.கிஷோர், (காலஞ்சென்ற திரு.கோ.எத்திராஜ், அலுவலக உதவியாளர், கோவை மாவட்ட கருவூல அலகு, கோவை தெற்கு சார்நிலை கருவூலம் அவர்களின் மகன்) கருணை அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ல் பிரிவு 17–ன் உட்பிரிவு (1)–ன்படி தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டார். மேலும் அச்செயல்முறையின்படி தனியர், கோவை மாவட்ட கருவூலத்தில் இளநிலை உதவியாளராக 20.09.2019 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

3. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கருவூலக் கணக்கு ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு எ.கிஷோர், இளநிலை உதவியாளரின் தற்காலிகப் பணிநியமனம் இளநிலை உதவியாளர் பதவியில் திருப்தி அளிக்கும் படியாக உள்ளதாலும் அப்பதவிக்குரிய அனைத்துத் தகுதிகளையும் தனியர் நிறைவு செய்துள்ளதாலும் திரு எ.கிஷோர் அவர்களின் பணியினை தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016–ல் பிரிவு 28–ன் உட்பிரிவு (1)–ன்படி தனியர் பணியேற்ற நாளான 20.09.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது. மேற்கண்ட தனியர் பொருட்டு தமிழ்நாடு கருவூலக் கணக்குத் துறை பணிவிதிகளின்படி அன்னாருக்கு தகுதிகாண்பருவம் துவங்குதல் மற்றும் வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகள் ஏதும் இருப்பின் அது குறித்து தக்க செயல்முறை ஆணை கருவூலக் கணக்கு ஆணையரால் வெளியிடப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

4. இவ்வரசாணை, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அ.சா.எண்.10134/க்யூ1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்த துறை அ.சா.எண்.18543/ஜி2/2020 –இன் இசைவுகளுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

S.கிருஷ்ணன்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

..3...

Scanned with CamScanner

திருஎ.கிஷோர், இளநிலை உதவியாளர், கோவை மாவட்டக் கருவூல அலகு. (பணிப்பதிவேடு மற்றும் அனைத்து மூலச்சான்றிதழ்கள்) (துறைத் தலைவர் வழியாக)
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை – 35.
செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர்தேர்வாணையம், சென்னை – 3.

நகல்

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை - 9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

Scanned with CamScanner